# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 11 ஆம் திகதிய*
## பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2015.12.14 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள்
## (திருத்தம்)

***(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*பிரதம அமைச்சர் அவர்களினால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

---

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா *6.00*** **தபாற் செலவு : ரூபா *10.00***

## உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள்
## (திருத்தம்)

ச.வ.ஒ. 50/2015

### (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கான தொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

சுருக்கப் பெயர்.

**1**. இச்சட்டம், 2015 ஆம் ஆண்டின்       ஆம் இலக்க, உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

262 ஆம் அத்தியாயத்தில் 27<u>ஊ</u> என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**2**. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 27உ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 27<u>ஊ</u> என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

"உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையை அதிகரித்தல்.

27<u>ஊ</u>. (1) (252 ஆம் அத்தியாயமான) மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ், (255 ஆம் அத்தியாயமான) நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (1) உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளைமூலம் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஒவ்வோர் உள்ளூரதிகாரசபையினதும் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை, அத்தகைய உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையின் நான்கிலொன்றினால் மேலும் அதிகரிக்கப்படுதல் வேண்டும்:

ஆயின், உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையின் நான்கிலொன்றாக அமைகின்ற எண்ணிக்கை ஒரு முழு எண்ணாகவும் பின்னமாகவும் இருக்குமிடத்து, அத்தகைய உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையின் நான்கிலொன்றாக அமைகின்ற எண்ணிக்கையாக முழு எண்ணானது கருதப்படுதல் வேண்டும்.

2-PL 009501-425 (2015/12)

(2) கட்டளைச் சட்டத்தின் 3இ என்னும் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையின்மூலம் அமைச்சரினால் தீர்மானிக்கப்பட்டவாறாக (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவ்வாறு அதிகரிக்கப்பட்ட எண்ணிக்கை, தேர்தல்களில் போட்டியிடுகின்ற ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினாலும் அல்லது (இதனகத்துப்பின்னர் "சுயேச்சைக் குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஏதேனும் ஆட்கள் குழுவினாலும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பெண் வேட்பாளர்களின் நிரலாக அமைதல் வேண்டும்.".

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் அவ்வாறு அதிகரிக்கப்பட்ட எண்ணிக்கை அமைச்சரினால் ஆக்கப்பட்ட கட்டளைமூலம் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி" என்னும் சொற்களிலிருந்து தொடங்கி, "தரப்பட்டுள்ள படிவத்தில்,-" என்னும் சொற்கள் வரையான சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சி அல்லது ஏதேனும் சுயேச்சைக்குழு, ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படும் நோக்கத்துக்காகவும் அத்தகைய உள்ளூர் அதிகாரசபையின் பெண் உறுப்பினர்களைத் தெரிந்தனுப்புவதற்காகவும், அத்தகைய உள்ளூர் அதிகாரசபையின் எல்லா வட்டாரங்களும் தொடர்பிலான வேட்பாளர்களின் நிரல்களைக் கொண்டுள்ள இரு நியமனப்பத்திரங்

களைச் சமர்ப்பித்தல் வேண்டும். ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையின் எல்லா வட்டாரங்களும் தொடர்பில் ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியினாலும் அல்லது சுயேச்சைக் குழுவினாலும் சமர்ப்பிக்கப்பட்ட இரு நியமனப் பத்திரங்களுள் ஒன்று, அத்தகைய உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படும் நோக்கத்துக்காக வேட்பாளர்களின் பெயர்களைக் கொண்ட நிரலொன்றைக் கொண்டு, பொருளளவில் முதலாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்தில்,-";

(2) அப்பிரிவின் (2அ), (2ஆ) மற்றும் (2இ) என்னும் உட்பிரிவுகளை, முறையே அப்பிரிவின் (2இ), (2ஈ) மற்றும் (2உ) என்னும் உட்பிரிவுகளாக மீள இலக்கமிடுவதன் மூலமும் ;

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தை உடனடுத்துப் பின்வரும் (2அ) என்னும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(2அ) இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையின் எல்லா வட்டாரங்கள் தொடர்பிலுமான மற்றைய நியமனப்பத்திரம், முன்னுரிமை ஒழுங்குவரிசை முறைப்படியான பெண் வேட்பாளர்களின் அத்தகைய எண்ணிக்கையினரின் பெயர்களைக் கொண்ட நிரலொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.";

(4) இரண்டாம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தையடுத்து வரும் பந்தியை அப்பிரிவின் (2ஆ) என்னும் உட்பிரிவாக இலக்கமிடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 65அஅ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 65அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 65அஅ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

*“தெரிந்தனுப்பப்பட வேண்டிய பெண் உறுப்பினர்களை வெளிப்படுத்துதல்.*

65அஅ. (1) அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சிகளுக்கும் சுயேச்சைக் குழுக்களுக்குமிடையே அத்தகைய உள்ளூர் அதிகாரசபைப் பிரதேசத்தின் எல்லா வட்டாரங்களிலிருந்தும் தெரிந்தனுப்பப்பட வேண்டிய பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கையை முன்னுரிமை ஒழுங்குவரிசை முறைக்கிணங்கப் பங்கீடு செய்வதில், தேர்தல்கள் ஆணையாளர், அத்தகைய உள்ளூர் அதிகாரசபைப் பிரதேசத்தின் எல்லா வட்டாரங்களிலும் உள்ள ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினாலும் சுயேச்சைக்குழுவினாலும் பெறப்பட்ட வலிதான வாக்குகளின் எண்ணிக்கையைக் கவனத்துட்கொள்ளுதல் வேண்டும் என்பதுடன் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 99அ என்னும் உறுப்புரையில் தரப்பட்டுள்ள முறை ஏற்றமாற்றங்களுடன் அதற்கு ஏற்புடையதாதலும் வேண்டும்.”.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவு அதன் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

“(அ) உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது தெரிந்தனுப்பப்பட்ட எல்லா வேட்பாளர்களினதும் மற்றும் 28 ஆம் பிரிவின் (2அ) என்னும் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்டவர்களான தெரிந்தனுப்பப்பட்ட பெண் வேட்பாளர்களினதும் பெயர்களைக் குறித்துரைக்கின்ற அறிவித்தலொன்றை வெளியிடுதல் வேண்டும் ; அத்துடன்”.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 66அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 66அ என்னும் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(அ) பந்தி (ஆ)வில், "வேண்டுகோள் விடுத்தல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "வேண்டுகோள் விடுத்தல் வேண்டும் ; அல்லது " என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்குப் பின்னர் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன்மூலமும் :-

"(இ) இக்கட்டளைச் சட்டத்தின் 65அஅ என்னும் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் பெண் உறுப்பினரொருவராகத் தெரிந்தனுப்பப்பட்ட உறுப்பினர் ஒருவர் தொடர்பிலானதாகவிருக்குமிடத்து, வெற்றிடம் ஏற்பட்டதிலிருந்து முப்பது நாட்களினுள், விடயத்துக்கேற்ப, அவ்வவ் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் அல்லது சுயேச்சைக்குழுவின் பெண் வேட்பாளர்களின் நிரலில் எந்தப் பெண் வேட்பாளரின் பெயர் முன்னுரிமை ஒழுங்குவரிசைப்படி அடுத்ததாகக் காணப்படுகின்றதோ அந்தப் பெண் வேட்பாளரைப் பெயர்குறித்து நியமித்தல் வேண்டும்.".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.*

**7**. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்